ஆசிரியர்:
மு. கருணாநிதி

# முரசொலி

–வார இதழ்–

முரசு 5 | 9–5–58 | வெள்ளி | ஒலி 4

விடுதலைப் பண்பாடும் வீரர் அணிவகுப்பு
விரையட்டும் திருவாரூர் நோக்கி!

★ ஆரூர் அழைக்கிறது; வாரீர்! ★

# ஆரூர் அழைக்கிறது; வாரீர்!

திருவாரூர் தீரர்தம் கோட்டம்; தென்னகத்தின் விடுதலைப் போருக்கு எழுச்சிமிக்க வீரர்களை ஈந்து வரும் பாடி வீடு! இன எழுச்சி கொண்ட மக்கள் பலமுறை இங்கு கூடி முரசொலித்திருக்கின்றனர். அந்த முரசொலியின் முழக்கம் கேட்டு தமிழகத்து வரலாறே புதியதோர் திருப்பம் பெற்றிருக்கிறது. அத்தகைய பெருமை பெற்ற ஆரூரிலேதான் தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாடு மே மாதம் 10, 11-ம் தேதிகளில் சிறப்புற நடைபெற இருக்கிறது.

தைக்கால் திடல் ஆரூரிலே ஒரு பிரம்மாண்டமான திடல்! அந்தத் திடலிலேதான் சுமார் ஐம்பதாயிரம் பேர் வசதியாக அமர்ந்து பார்ப்பதற்கான பெரிய பந்தல் வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன. பந்தலைப் பார்க்கச் சென்றேன். தோழர்கள் பலர் வியர்க்க விறுவிறுக்க வேகாத வெயிலில் நின்று கொண்டு மேடை யமைப்புக்கான வேலைகளுக்கு யோசனை வழங்கிக் கொண்டிருந்தனர். மொகலாய ஆட்சியின் ஈடு இணையற்ற கலைக் கோயிலான தாஜ்மஹாவின் தோற்றம் பந்தலின் முகப்பாக அமைக்கப்பட்டு வருகிறது. திராவிடரின் உரிமைக் குரலைத் திக்கெட்டும் பரப்பிய நிர்வாகமேதை பன்னீர்ச் செல்வத்தின் பெயர் பந்தலுக்கு சூட்டப்பட்டிருப்பது சாலப் பொருத்தமாகும். திராவிடரின் நல்வாழ்வுக்கெனவே கல்லடியும் சொல்லடியும் தாங்கி, உழைத்து உழைத்து ஓடாகி மறைந்த அண்ணன் அழகிரியின் பெயரை அரங்கம் தாங்கவிருப்பது, தஞ்சைத் தரணி மக்களின் நன்றியுணர்வுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்!

மாநாட்டு அலுவலகமோ ஒரு தேன்கூடுபோல சுறுசுறுப்பாகக் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறது. இரவு பகல் எந்நேரமும் மாவட்டம் பூராவிலிருந்தும் தொண்டர்களும் தோழர்களும் வந்து யோசனை கேட்டும் யோசனை வழங்கியும் ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கின்றனர். ஆசிரியர் மு. கருணாநிதியின் கனிவான பேச்சும், காரிய மாற்றும் திறமையும் மாநாட்டு வெற்றிக்கு அச்சாரம் அளிக்கின்றன. (ஆசிரியர் மு. க. இதைப் படித்துவிட்டு என்னை அன்புடன் கடிந்து கொள்வார் என்பதை நானறிவேன்; ஆனால் நிருபரின் கடமை உண்மையை ஒளிக்காமல் சொல்வதுதானே?) பந்தலின் நீள அகலத்தைப் பார்த்தே மாற்றுக் கட்சியார் ஆச்சரியம் மேலிடத் திகைத்து நிற்கின்றனர். பத்து, பதினோராம் தேதிகளில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் விண்ணதிர உரிமை முழக்கம் செய்யும் போது...! அப்பப்பா, அண்ணா அவர்களின் வாசகம் எவ்வளவு தீர்க்க தரிசனம் நிரம்பியது. இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? மாற்றார் உள்ளத்திலும் இக்கேள்வி எதிரொலிக்கத்தான் போகிறது.

காரிய மாற்றும் கர்ம வீரர் மதியழகன் அவர்கள் தலைமை தாங்க, நிர்வாகத் திறமையும் வாதிடும் வன்மையும் ஒருங்கே அமையப் பெற்ற ப. உ. சண்முகம் அவர்கள் திறந்து வைக்க, கழக முன்னணி வீரரெல்லாம் கருத்துரை வழங்க, நாவலரின் சொற்பெருக்கும் கழகத்தின் காவலராம் அறிஞர் அண்ணாவின் அரசியல் விளக்கமும் சிறப்பு செய்ய, மாநாடு தமிழகத்தின் வரலாற்றில் புதியதொரு பொன்னேடு சேர்க்கப் போகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவதுபோல, தஞ்சை மாவட்டம் வண்டல் நிரம்பிய சத்துள்ள பூமி; விதையை மட்டும்தேர்ந்தெடுத்து விதைத்துவிட்டால் போதும்; பிறகு பொன்னாகவே சொரிந்துவிடும்! அப்படிப்பட்ட பூமியிலே தூவப்படும் கருத்துக்கள் நல்ல பலனளிக்கப் போகிறது என்பதைப்பற்றி ஆருடமே கணிக்கத் தேவையில்லை. மாநாட்டின் மற்றொரு சிறப்பு, முதல் நாள் இரவு, 'உதய சூரியன்' உருவிலே மக்கள் பெற இருக்கின்ற கொள்கை விளக்கம்! புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். லட்சிய நடிகர் ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகிய நமது கலையுலகப் பிரதிநிதிகள் கலையுலகில் நமது சாதனைபற்றி அரிய சொற்பொழிவுகள் ஆற்ற இருக்கின்றார்கள். மகளிர் கருத்துரைகளுக்குச் சிறப்புச் செய்ய அவர்களுக்கென்றே தனியரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தவிர, 'The New Spirit of the South' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் உரையாற்ற இருக்கின்றார் நண்பர் வி. பி. ராமன் அவர்கள்.

முதல் நாள் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் இன்னிசையுடனும், இரண்டாம் நாள் இன்னிசைப் பெருங்கோ குளிக்கரை பிச்சையப்பா அவர்களின் நாதசுர இன்னிசையுடனும் மாநாடு துவங்க இருக்கிறது. தவிர, இசை முரசு அனிபா, மன்னை சுந்தரேசன் ஆகியோரின் இசை முழக்கம் உண்டு!

இப்படிச் சீரும் சிறப்புமாய் நடக்கவிருக்கும் மாநாட்டில் உருவான திட்டங்கள் பல தீர்மானங்கள் உருவில் நிறைவேற்றப்பட இருக்கின்றன. தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் எப்பொழுதுமே தஞ்சைக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு; அதிலும் சிறப்புப் பெற்றது ஆரூர். அந்த ஆரூரில் அணிவகுத்துப் புறப்பட இருக்கின்ற மக்கள் சக்தி, லட்சியபூமியைச் சென்றடையும் வரையில் ஓயாது; ஒழியாது! 10-ம் தேதி காலையில் நடக்கவிருக்கின்ற பிரம்மாண்டமான ஊர்வலத்தில் தலைவர்களை வரவேற்க வளைவுகள் கட்ட இப்பொழுதிருந்தே ஆயத்தம் செய்யும் ஆரூர் வாசிகளின் ஆர்வத்தைப் பார்க்கின்ற பொழுது, மக்களிடையே விடுதலை வேட்கை — நாட்டுணர்வு — எந்த அளவுக்கு வேரூன்றிவிட்டது என்பது நன்கு தெரிகிறது. ஆரூரில் திராவிடத்தின் தன்னிகரில்லாத் தலைவர்களை வரவேற்க, அவர்தம் ஆணை கேட்டு அதன் வழி செயல்பட, ஆர்வம் அலைகடலெனப் பொங்கி எழுந்து கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் மட்டுமின்றி, தமிழகமெங்கணும் உள்ள வீரரையெல்லாம் — வீராங்கனையரையெல்லாம்—ஆண்ட இனத்தின் புகழை மீண்டும் பெற்றிட—வடவரின் பிடியிலிருந்து விடுபட்டு எழில் திராவிடம் காண—வாரீர், வாரீர் என ஆரூர் அழைக்கிறது. ஆயிரமாயிரமாக—லட்சம் லட்சமாகக் கூடி—லட்சிய தீபத்தை ஏற்றி வைத்து, அடிமையிருளை அகற்றுவோம்! இருள் நிலையானது அல்ல; உதயசூரியன் கண்டவுடன் ஓடி மறைவது திண்ணம்!

உதித்துவிட்டான் செங்கதிரோன் தெற்கே
கொதித்தெழுவோம் கொத்தடிமை தீர்வதற்கே!

—என வீரப் பண் பாடி, காளையரும் — கன்னியரும், முதியோரும்—சிறாரும், அனைவரும் திரண்டு வாரீர் தென்னகத்தின் விடுதலை காண என ஆரூர் அழைக்கிறது!

வளமார் எமது திராவிடநாடு
வாழ்க! வாழ்கவே!!

—நமது நிருபர்

---

வடநாட்டில் வளம் கண்டோர்-
வாழ்ந்து கெட்ட திராவிடர் கண்களில்
குளம் கண்டோர்-
விடுதலை பெற்றிட களம் கண்டோர்-
வீழ்ந்துவிட்ட பிணம் பல கண்டோர்-
வெற்றி மணம் கண்டோர்-

புதிய திட்டம் தீட்ட-
போர் விளக்கம் பெற-
உரிமை முரசு தட்டி உயர்வு காண-
பஞ்சைக்கு வாழ்வளித்து அவர்தம்
நெஞ்சை நிமிர்த்த-
விடுதலைப் பண் பாடும் அணிவகுப்பாய்

**கூடுகிறார், திருவாரூரில்!**

# தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாடு

வெள்ளி 9-5-58 சென்னை

# ஆரூர் அழைக்கிறது!

"தஞ்சைக்கு வாரீர்" என்று தமிழ் முழக்கம் கேட்கிறது! பஞ்சைக்கு வாழ்வளித்து, அவர் தம் நெஞ்சை நிமிர்த்திடும் கொள்கையினர் கூடப் போகிறார்கள்—"பகுத்தறிவு வளர்க!" எனக் கூவப் போகிறார்கள்—பழந்திரு நாட்டின் விடுதலையை உடனே கோரப் போகிறார்கள்! முடியுடை வேந்தர்கள் வலம் வந்த வீதிகளிலே முன்னேற்றக் கழகத்தினர் உலவிடப் போகிறார்கள்!

தன் மகன் வீதிவிடங்கன் தேர் ஊர்ந்து பசுங் கன்றின் உயிர் மாய்த்ததற்காக; அவனையே திரும்பவும் வீதிதனில் படுக்க வைத்து அவன்மீது தேர் ஏற்றியதாக கதை வழங்குகிறது திருவாரூரில்!

அந்த மனுநீதிச் சோழன் தொடங்கி இந்த நாட்டிலே மனு தர்மம் செய்த கேட்டினை உணர்ந்து; சனாதன மேட்டினைத் தூர்த்திட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்று அதே திருவாரூரிலே திரளப் போகிறார்கள்!

பசு மணியடித்ததாம்; அது கேட்ட மன்னன் புலியாக மாறி நல்ல தீர்ப்பு வழங்கினானம்!

ஆனால் இன்றோ நாம் வடநாட்டவரின் கொடுமையைச் சொல்லி புலியாக மாறி மணி அடிக்கிறோம்; பசுவாக வீற்றிருக்கும் மத்திய அரசாங்கமோ நீதிக்குச் சீட்டு கொடுத்து விட்டு; அநீதியின் அவதாரமாக வீற்றிருக்கும் அவல நிலையை எடுத்துரைக்க அறப்போர் வீரர்கள் அணிவகுத்து வலம் வரப் போகிறார்கள்!

கடாரம் கொண்டான்—அந்த நாள் தமிழ் வேந்தன் நாவாய் மிதந்து; பர்மாவிலே படை மோதி; தமிழர் வீரத்தை விளம்பரம் செய்து அதன் நினைவாக எழுப்பிய அழகுத் திருநகரம்!

அந்த எழில் நகரோ திருவாரூருக்கு சில கல் தொலைவில், இன்று வறுமை குடிகொண்டிருக்கும் குடில்கள் பல நிறைந்த சிற்றூராகத் திகழ்கிறது!

அன்று கடல் கடந்து கடாரம் கொண்டான் இன்று கொட்டும் வறுமைத் தேள் கொண்டான்; வாட்டும் அறியாமைத் துயர் கொண்டான்; இருள் கொண்டான்; இல்லாமை கொண்டான்!

திருவாரூரிலே திரளும் தூய்மையாளர்; கண்களிலே நீர்வழிய வாழ்ந்து கெட்ட இந்தக் கதையை ஒருமுறை எண்ணுவர்; இனி வாழும் வகைதேடி உவகையால் துள்ளுவர்!

தென்னாட்டு சைவத் தலங்களிலேயே மிகப் பெரிய குளம் திருவாரூரிலேயேதான் இருக்கிறதாம்!

ஆனால், ஆரூரில் அணிவகுப்போரோ; "இதைவிடப் பெரியதொரு குளமொன்று இருக்கிறது; அதுதான் அநீதியால் கொள்ளையடிக்கும் வட நாட்டார் கொடுமை தாங்காது நாம் பொங்கியழும் கண்ணீர்க் குளம்" என்று குமுறும் எரிமலையாய் உவமை விளக்கம் காட்டுவார்கள்!

நமது இலட்சிய வரலாற்றிலே திருவாரூர் தனி இடத்தை—நல்ல பெயரை பொறித்துக் கொண்ட பூமி!

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு **1940**—ல் நம்முடைய மூதாதையினர்—நீதிக் கட்சியினர்—மாகாண மாநாட்டினை அங்கே கூட்டி—'திராவிடநாடு தனி நாடாக வேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்!

அதற்குப்பிறகு கால வேகத்தில் எவ்வளவோ மாற்றங்கள்! ஆனால் அன்று முதல் இன்று வரை அசையாது—காலத்தாலும் கடின நெஞ்சு படைத்தோராலும் அழியாது நிற்கின்ற அந்தத் தனிநாடு கோரிக்கையை மீண்டும் எழுப்பத்தான் இப்போது மறுபடியும் கூடுகிறோம்—அதே திருவாரூரில்!

கூடுமிடம் தஞ்சை மாவட்டம்! நமது கொள்கை விளையும் நஞ்சை! பன்னீர்ச்செல்வம் பந்தல்—அழகிரியின் அரங்கம்! ஆம், தஞ்சைப் பூமியே பன்னீர்ச்செல்வம் பந்தல்தான் — அழகிரியின் அரங்குதான்! அங்கேதான் நாமும் கூடுகிறோம் நலிவு போக்க; புதிய பொலிவு எழுப்ப!

இரண்டு நாள் மாநாட்டிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்மதி; தித்திக்கும் தேனுக்கு நிகர் கற்கண்டுச் சொல்லழகர் தோழர் மதியழகன் அவர்கள் தலைமை வகிக்கிறார்!

சண்டமாருதம்போல் சொல் வீசி; அதில் சுடுகின்ற கருத்து வீசி; நாளை இவரிடத்தில் எந்த முகம் காட்டுவது—என்று சட்ட மன்றத்தில் மாற்றார் எண்ணிடும் வண்ணம் கூற்றாய் விளங்கும் தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் திறந்து வைக்கிறார்!

நடிப்பால், இசையால், நல்ல தொண்டால் நாட்டுப்பணியாற்றி வரும் நண்பர் கே. ஆர். ராமசாமி அவர்களது தேமதுரத் தமிழிசையோடு மாநாடு துவங்க இருக்கிறது.

இரண்டாம் நாள் மாநாட்டில் இசைப் பெருங்கோ திருவாளர் குளிக்கரை கே. எஸ். பிச்சையப்பா அவர்கள் நாயன இசை வழங்குகிறார்.

இயக்கக் கருத்துக்களை இசையோடு கலந்து இடியென முழங்கும் தோழர்கள் அனிபா; மன்னை சுந்தரேசன்—ஆகியோரின் இசையும் இருக்கிறது!

—இத்தனை சிறப்பும் மிகுந்த திருவாரூர் மாநாடு உங்கள் அனைவரையும் அழைக்கிறது; மாநாட்டு வரவேற்புக் குழுவினரின் சார்பாக நாமும் அழைக்கிறோம்; செங்நெற் கொல்லையாம் ஆதி சோழர் தலைநகரில் கூடிடுவோம் வாரீர், வாரீர் என்று!

★ ★ ★



# திருவாரூரில் மே 10, 11 நாட்களில்!

# பழந் திருநாட்டு விடுதலை காண பன்னீர்ச்செல்வம் பந்தலுக்கு வாரீர்!

[சென்ற 20—4—58 அன்று, குடந்தை பன்னீர்ச் செல்வம் படிப்பக ஆண்டு விழாவில் ஆசிரியர் மு. கருணாநிதி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.]

பன்னீர்ச்செல்வம் நமக்கு நல்லதொரு அரசியல் வழிகாட்டியாக இருந்து மறைந்த மாவீரர்! அவர் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவாய்—தருகின்ற நிழலாய்—மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய்—அரசியல் ஞானியாய்-சுயமரியாதைச் சுடராய் — தமிழகத்தில் நமக்குக் கிடைத்த ஒப்பற்ற செல்வமாவார்! அந்த செல்வத்தை 1940—ம் ஆண்டு நாம் பிரிந்தோம்! அவரை இழந்த நேரத்தில் நாம் கண்ணீர் வடித்தாலும், அதன் பிறகு அவரது நினைவை நெஞ்சிலே ஏந்தி—அவரது தூய நற்கொள்கைகளை வலிவோடும் பொலிவோடும் நாட்டிலே பரப்ப வேண்டும் என்பதற்காக நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறோம். எந்த அரசியலை நாட்டிலே பரப்ப வேண்டும் என்று அவர் எண்ணினாரோ—எந்த அளவுக்கு திராவிடர் இயக்கம் அரசியலைக் கைப்பற்ற வேண்டும் என்று கருதினாரோ—அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக—நாம் அவருக்கு செலுத்தும் மரியாதையாக-அவரது வழியைப் பின்பற்றி வருகிறோம்!

அவர் சட்ட மன்றத்திலே வாதாடிய திறனும், காங்கிரஸ்காரர்களது மந்திரி சபை நேரத்திலும் அவர் பேசிய பாங்கும்—எதிர்க் கட்சிக்காரர்கள் போற்றிப் பாராட்டக்கூடிய ஒன்றாகும். கேலிக்குக் கேலி—கிண்டலுக்குக் கிண்டல்—ஆவேசமான பேச்சுக்கு ஆவேசமான பதில்—என்ற முறையில் பேசி திராவிடர் இயக்க வளர்ச்சிக்குப் போராடினார். அவர் விட்டுச் சென்ற இடத்தில் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்திருப்பதும், அவர் விட்டுச் சென்ற பணியை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து நடத்தி வருவதும்—இன்றைய தினம் 'புராணிகர்'களுடைய கூற்றுப்படி சொல்ல வேண்டுமானால், அவரது 'ஆத்மா சாந்தியடையும்' என்று கூறலாம். நாம் ஆத்மா என்று ஒன்று இருப்பதை நம்பாதவர்களான காரணத்தால், அவர் பெயர் நிலைக்க—புகழ் நிலைக்க—கருத்துகள் நிலைக்க—நாம் அவர் பாதையிலே நடந்தோம்! பன்னீர்ச்செல்வங்கள் பல தோன்றுவதற்குக் காரணமானோம் என்ற பெருமையை நமக்கு நாமே அடைந்து கொள்கிறோம்.

அப்படி நமது சீரிய நற்பணிகள் பலவற்றுள் ஒன்றாகத்தான் இங்கே இந்த மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது! நான் மேடையிலே நிற்கின்ற நேரத்தில் காண்கிறேன்; இந்தக் கூட்டத்தை ஒருமுறை உற்றுப் பார்க்கிறேன்; உற்சாகத்தோடு பார்க்கிறேன்; நாம் கேட்கின்ற திராவிட நாட்டை இங்கே கூட்டத்திலே நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் இருக்கிற நீங்கள் சேர்ந்து எல்லைக்கோடு போல் வகுத்துக் காட்டுகிறீர்கள். அப்படி எல்லை வகுத்துக் காட்டி, அதற்கான தொல்லைகள் வந்தாலும், தேசிய முகாமிலிருந்து பணிபுரிவோம்; துவளோம்; துவண்டு விடோம்—என்ற உறுதி மொழியைத்தான் நீங்கள் தருவதாகவும் நான் கருதுகிறேன்.

நமது வளர்ச்சியின் ஒரு கட்டமாக தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாடு திருவாரூரில் மே, 10, 11 தேதிகளில் நடைபெறுகிறதென்பதும், நம்முடைய மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அதனுடைய வரவேற்புக்குழுத் தலைவர் என்பதும், அந்த மாநாட்டில் நான் பொருளாளர் என்பதும், நீங்கள் அறிந்ததே! நான் வரவேற்புக் குழுவிலே ஒரு உறுப்பினன் என்ற முறையில் உங்கள் அனைவரையும் வரவேற்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மாநாட்டை சீரும் சிறப்புமாக நடத்தித்தர வேண்டியது உங்கள் அனைவருடைய கையிலும் இருக்கிறது!

சென்ற ஏழு, எட்டு நாட்களாக, நாங்கள் தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப் பயணம் நடத்துகின்ற நேரத்தில், சின்னஞ்சிறு குக்கிராமங்களில்—பட்டி தொட்டில்களில்கூட பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுவதையும் — சில பல இடங்களில் ஆர்வ மகுதியால் வானவேடிக்கைகள் நடத்திக் காட்டுவதையும் — அழகான மண்டபம் போன்ற மேடைகள் அமைப்பதையும்-அந்த மேடையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைக் கேட்டு மகிழ்வதையும் காண்கிறோம்!

சுப்பிரமணியம் சொல்கிறார்; "இவர்கள் அழகாகப் பேசுகிறார்கள்; ஆகவே மக்கள் கூடுகிறார்கள்" என்று! பக்தவத்சலம் சொல்கிறார்; "இவர்கள் திட்டிப் பேசுகிறார்கள்; ஆகவே கூட்டம் கூடுகிறது!" என்று! இரண்டு அமைச்சர்களும் இரண்டு முரண்பாடான செய்திகள் சொல்லி, தங்களுக்குத் தாங்களே சான்று தேடிக் கொள்கிறார்கள்.

உள்ளபடியே தி. மு. கழகத்தில் இருக்கிற நாங்கள் அழகாகப் பேசுகிறோம்; அடுக்குச் சொற்களை வாரி வீசுகிறோம்; ஆகவேதான் இத்தகைய கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று கூறுவார்களேயானால் நான் அதில் நிச்சயமாக பெருமைபட்டுக் கொள்ளத் தயாராக இல்லை. நான் மிகமிக பணிவோடு, தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்; அழகாகப் பேசி மக்களைக் கவரக் கூடியவர்கள் காங்கிரசிலேயும் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அலங்காரமாகப் பேசக் கூடியவர்கள் அவர்களிலேயும் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் தி. மு. கழகம்தான் மக்களை மயக்குகிறது என்று கூறுவார்களேயானால் — தி. மு. கழகத்தாரிடம் அழகான சொற்கள் பிறக்கின்றனவென்றால்—ஆர்வமிக்க சொற்கள் ஊறுகின்றன என்றால் அதற்குக் காரணம் என்ன? அது நடிப்பு அல்ல; உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஊறி வருகிற சொற்கள்—இந்த நாட்டைப் பிடித்திருக்கின்ற அடிமை—கொடுமை—வடநாட்டு ஏகாதிபத்தியத்தினுடைய கோரப் பிடியிலே சிக்கியிருக்கின்ற நம்முடைய கழுத்தை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கொள்கின்ற பெருமுயற்சி—இவைகள்தான் காரணமாகும்!

அமைச்சர் காமராசர் பல இடங்களிலே பேசும்போது ஆவேசமாகக் குறிப்பிட்டாராம், "திராவிட முன்னேற்றக் கழகத்தார் கேட்கிற திராவிட நாட்டை இந்த நாட்டிலே கடைசி காங்கிரஸ் தொண்டன் உயிரோடு இருக்கிறவரையிலே கொடுக்கமாட்டோம்!" என்று! சத்திரத்து சாப்பாட்டுக்கு தாத்தையங்கார் உத்திரவு என்ற பழமொழி கேட்டிருக்கிறோம். நாம் கேட்பது டெல்லியிடம்! வடநாட்டு ஏகாதிபத்தியத்தைப் பார்த்து கேட்கிறோம், திராவிட நாட்டைத் தனி நாடாக ஆக்கு; திராவிட நாட்டுக்கு விடுதலை கொடு—என்று! இங்கே இருக்கின்ற அவர்களுடைய ஏஜெண்டு — அவர்களுடைய காவலர் காமராஜ் சொல்கிறார், கடைசி காங்கிரஸ்காரன் இருக்கிற வரையில் திராவிட நாடு கொடுக்க முடியாது என்று! அவர் தன்னுடைய பொறுப்பை மறந்து—தான் இருக்கின்ற இடத்தின் கண்ணியத்தை மறந்து—தி. மு. கழகத்திற்குச் சவால் விடுகிறார். அவருடைய சவாலை தி. மு. கழகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. அப்படி ஏற்றுக் கொள்கிற நேரத்தில், காமராசருக்கு எதிர்ச் சவால் விடவும் விரும்புகிறது.

"காமராசரே! இந்த நாட்டிலே கடைசி காங்கிரஸ்காரன் இருக்கிற வரையில் திராவிடநாடு கொடுக்க முடியாது என்று கூறுவதற்கு உமக்கு உரிமையிருப்பது போலவே, எமக்கும் உரிமை இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கின்ற கடைசி திராவிடனுடைய உடம்பிலே கடைசி சொட்டு ரத்தம் இருக்கிற வரையில் திராவிட நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடுவான்! போராடுவான்!"

திராவிட நாட்டினுடைய விடுதலைப் போராட்டம் வல்லடி வழக்கல்ல! வார்த்தைகளின் சொற் கூட்டங்களை வைத்துக் கொண்டு வர்ண ஜாலவித்தை நடத்தும் கேளிக்கையல்ல! ஒரு தேசிய எழுச்சி; திராவிட நாட்டினுடைய விடுதலை,

## திருவாரூர் மாநாட்டின் ஊர்வலச் சிறப்பு!

★

யானைவரும் முன்னே!
கழக வீரர் வருவர் பின்னே!

★

கிளைக் கழகங்கள் கொண்டுவரும்
அலங்கரிக்கப்பட்ட சிங்கார வண்டிகள்!

★

ஆகாய விமானம்போல்—கப்பல்போல்—
தேர்போல்—விதவிதமான அணிவகுப்பு!

★

நாலு குதிரை பூட்டிய அழகிய
சாரட்டில் தலைவர்கள் பவனி!

★

பல்லாயிரக் கணக்கான கொடிகள்—
இடையிடையே தலைவர்களின்
மிகப் பெரிய உருவப் படங்கள்—
கண்கொள்ளாக் காட்சி!

★

நகரமெங்கும் கொள்கை முழக்கமிடும் நூற்றுக்
கணக்கான வளைவுகள்! தோரணங்கள்!

★

ஆரூர் தரும் இந்த அரிய எழுச்சி
விருந்தைச் சுவைக்கத் தவறாதீர்கள்!

# திராவிடப் பெருங் குடியினரே!

# செந் நெற் கொல்லையாம் தஞ்சை நம் கொள்கை விளையும் நஞ்சை!

அதை ஏதோ சாதாரணமான—மட்டமான வார்த்தைகளால் அடக்கி ஒடுக்கி விடலாமென்று அமைச்சர்கள் கருதுவார்களேயானால், அவர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியப் பித்தர்களாயிருந்தாலும் சரி—அல்லது அந்தப் பித்தர்களுக்குக் "காவடி" தூக்குகின்ற சென்னை மந்திரிகளாயிருந்தாலும் சரி — நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்; எந்த நாட்டினுடைய அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும் — எந்த நாட்டினுடைய விடுதலை ஏட்டைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும்—அந்த நாட்டினுடைய வரலாற்று ஏடுகளில் ரத்தம் சிந்தி, எலும்புகளை முறித்துக் கொடுத்த போராட்டங்கள் பல நடைபெற்று, கடைசியிலே விடுதலை வீரர்களுக்குத்தான் வெற்றி என்று முடிவுரை எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்!

அந்தப் புத்தகங்களைத்தான்—அந்த வரலாறுகளைத்தான் ஆணவம் பேசுகின்ற அமைச்சர்களுக்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்!

கிடைத்த மேடைகளில் மட்டுமல்ல; சட்டமன்றத்திலேகூட விழுதுகள் பலவிட்டு ஓங்கி உயர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஆலமரத்தின் விதையை ஆராய்கிறார் சுப்பிரமணியம்! காங்கிரஸ் விதையோடு அதை ஒப்பிட்டு, 'திராவிட முன்னேற்றக் கழகம் முளைக்காத விதை-உலுத்துப்போன விதை, எனச் சொல்லி, தன்னையும், தன் கட்சித் தோழர்களையும் துணிந்து ஏமாற்றுகிறார்.

காங்கிரஸ் விதை மிகப் பெரிய விதையாக இருக்கலாம். அதே நேரத்தில் நான் அவர்களுக்குப் பழைய பாடல் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். பெரிய விதைதான். ஆனால் அது யாருக்குப் பயன்படும்?

"தேன் படு பனையின்
திரள் பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம் பெற
வளரினும்
ஒருவருக் கிருக்க நிழலா
காதே"

—என்று ஒரு பாட்டு உண்டு.

பனைமரத்தின் விதை பெரிதாக இருந்தாலும், வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்தாலும், ஒரு ஆள் தங்குவதற்கு பனைமரத்தின் நிழல் பயன்படாது! அந்த நிழல்தான்—அந்த பனைமரத்தின் விதைதான்—காங்கிரசிற்குக் கிடைத்திருக்கிற பெரிய விதை! அந்த நிழலிலே ஒரு ஆள் தங்க முடியாது. ஒரு ஆள் தங்கமுடியுமென்றால் அப்படித் தங்கியிருக்கும் ஒருவரும் இருக்கிறார் என்றால் அவர்தான் பண்டித நேரு! அவர் போனால்தான் அங்கு வேறு ஆள் சென்று தங்க முடியும்!

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விதை பனம் பழத்தின் விதையைப் போல் பெரிதானது அல்ல; மிக மிகச் சிறியது!

"தெள்ளிய ஆலின் சிறு பழத்
தொரு விதை
தெண்ணீர் கயத்துள் சிறு
மீன் சினையினும்
துள்ளிதே ஆயினும்
அண்ணல்யாமே
அணிதேர் புரவி ஆட்பெரும்
படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா
கும்மே!

ஆலம் பழத்தின் விதை சிறு மீனின் சினையை விடச் சிறியதாயினும், அணி தேருடனும் புரவியுடனும் ஆட்பெரும் படையுடனும் ஒரு மன்னர் தங்கியிருக்க நிழல் தரும். அது போன்ற விதைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விதை! இந்த விதை விளைத்த ஆலமரத்தின் கீழே திராவிடப் பெருங்குடி மக்கள் அத்தனை பேரும் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே நிச்சயம் நின்று, அந்த நிழலைப் பெற முடியும்; நிச்சயமாக திராவிடத்தின் வெற்றியைப் பெற முடியும்!

அப்படி நாம் கருதுகின்ற நேரத்திலேதான் சொல்லுகிறார்கள், "எந்த நேரம் பார்த்தாலும் 'வடக்கு தெற்கு' என்று பேசுகிறார்களே; திராவிடத்தைப் பிரிக்க வேண்டும் என்று கூறுகிறார்களே; என்ன அர்த்தம் இருக்கிறது? அது வெறும் வார்த்தை அலங்காரமே தவிர வேறு என்ன?" என்று கூறுகிறார்கள்!

அதற்குத்தான் நாம் ஆயிரமாயிரம் உதாரணங்களை எடுத்துக் காட்டி வருகிறோம்! நாம் தருகின்ற வரிப் பணம் அத்தனையும் இன்றைய தினம் வடநாட்டுக் காவலர்களால்—வடநாட்டு மூலவர்களால்-வடநாட்டுக்குப் பயன் படுத்தப் படுகிறதே தவிர, நம்முடைய நாட்டுக்கும் பயன் படுகிறதா? நம்முடைய நாட்டுக்குத் திட்டம் வேண்டுமென்றால், பணமில்லை என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில் நமக்குக் கிடைக்கின்ற செய்திகள் நம் நெஞ்சிலே வேல் பாய்ச்சுகின்றன. நமக்கு மட்டும் பணமில்லை என்று கூறிவிட்டு, அங்கே—வடக்கே ஒரு பாலைவனத்தில் தண்ணீர் கொண்டு வர முயற்சி செய்து வருகிறார்கள். ராஜபுதனத்தில் பாலைவனப் பகுதிகள்தான் ஏராளம்! அந்தப் பாலைவனத்துக்கு 415 மைல் தூரத்திலுள்ள சட்லெஜ் நதியிலிருந்து நீர் கொண்டுவர வாய்க்கால் வெட்டுகிறார்கள்! அதற்கு 60 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள்! கால்வாயும் உலகத்திலேயே மிகப்பெரிய கால்வாய் — ஆசியா கண்டத்திலேயே பெரிய கால்வாய்—பாலைவனத்தை சோலை வனமாக்க, அங்கே வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்! அதற்கு செலவழிக்கப்படுகிற பணம் 60 கோடி ரூபாய்!

அதே நேரத்தில் "தென்னாட்டில் நீர்வளமில்லை; அதனால் நிலவளமில்லை; நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்வீர்!" எனக் கேட்டால், பணமில்லை என்கிறார்கள். "பணம், அதோ இருக்கிறதே!" என்று காட்டினால் "திட்டங்கள் நிறைவேற்ற ஆறுகளில்லை!" என்கிறார் காமராசர்!

தண்ணீர் இல்லாத ஆற்றுக்கு எப்படி அணை கட்டுவது என்று கேட்கிறார்; ஆனால் தண்ணீர் காணாத பாலைவனத்தில் வாய்க்காலை வெட்டிக் கொண்டு வருகிறார்கள் அங்கே!

நீரில்லா ஆற்றுக்கு அணையா? காமராசர் கிண்டல் செய்கிறார். காரணம், படிப்பில்லா அமைச்சர் அவர்!

அணைதானா கட்டச் சொல்கிறோம்? நீர்ப்பாசனத்திற்கு வேறு வழியே கிடையாதா? 'உருப்படியான திட்டங்களைச் சொல்லுங்கள்; சொல்லுங்கள்' என்று காங்கிரஸ்காரர்கள் கேட்ட நேரத்தில் அப்படி உருப்படியான திட்டங்களை நாம் சட்ட மன்றத்திலே எடுத்து உரைத்தது கிடையாதா? நிலவளம் ஏன் இல்லை? ராமனாதபுரம், திருச்சி மாவட்டங்களிலே-தஞ்சை மாவட்டத்தில் சிற்சில பகுதிகளிலே-இன்னும் மதுரை மாவட்டத்திலே—பல பொட்டல் காடுகள் இருப்பானேன்? தரிசு நிலங்கள் இருப்பானேன்? அவைகளில் ஏன் சாகுபடி நடைபெறவில்லை?

அதே நேரத்திலே இந்த அமைச்சர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், ஜப்பான் நாட்டைப் பற்றி! அந்த நாட்டில் எரிமலைகளே அதிகம்! விளை நிலங்கள் இல்லை! அதனால் மனிதன் அங்கு அழுத்தமான—கனமான வீடு கட்டிக் கொள்வதில்லை! எரிமலை எந்த நேரத்தில் பொங்குமோ என்று பயந்து கொண்டு—அனுதினமும் ஆபத்தை எதிர் நோக்கிக் கொண்டு—உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அட்டை வீடுகளை கட்டிக் கொண்டு எரிமலை ஓரங்களில் வசித்து வருகிறான்! நில நடுக்கமும், எரிமலையும் கொண்ட நாடு அது! இருந்தாலும் அங்கே வாழ்கிற மக்களுக்கு வாழ்வு வேண்டாமா? அதற்கு நல்ல வளம் வேண்டாமா? வளம் வேண்டுமானால் நல்ல நிலம் வேண்டாமா?

அந்த நிலத்தை ஜப்பானிய சர்க்கார் அவர்களுக்கு எப்படித் தந்திருக்கிறது தெரியுமா? அவர்களும் பயிரிடுகிறார்கள்! நிலமில்லை; ஆனாலும் நெற்பயிரிடுகிறார்கள்! எப்படி? எங்கே? கடலிலே பயிரிடுகிறார்கள்! "என்ன பயித்தியக்காரா! கடலிலே என்ன "பாசி"யா பயிரிடுகிறார்கள்?" என்று கேட்கிறீர்கள்? அல்ல தோழர்களே; அல்ல! நல்ல பச்சை பசேலென்ற—தங்க நிற நெல்மணிகளைக் காட்டுகின்ற நெற்பயிரைத்தான் அங்கே விளைக்கின்றார்கள்! எப்படி என்று கேட்கிறீர்களா? இங்கே தெப்பம் கட்டுகிறார்களே; குளங்களில்—திருவிழா நேரங்களில்-அதைப்

## திருவாரூர் மாநாட்டின் எழில்மிக்க பந்தல்!

★

இதுவரை எந்த மாநாட்டிலும் இல்லாதவாறு, 10 அடி உயரத் தட்டுப் பந்தல்! அதைச் சுற்றிலும் தோரணங்கள்! அதற்கு எழில் சேர்ப்பதுபோல் மத்தியில் 12 அடி உயரப் பந்தல்! மேலும் அழகு படுத்த 20 அடி உயரக் கோட்டகை!

★

கோட்டகை முழுதும் கோலு மண்டபம் போன்ற ஜோடனை—கண் கவரும் மேடை அமைப்பு—அதில் கம்பீரமாகத் தோன்றும் அழகிரியின் உருவம்!

★

மாயவரம் ராஜன், ஓவியர் கருணா குழுவினரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மேடை முகப்பு—குற்றாலம், மாயவரம் தோழர்களால் அமைக்கப்படும் பனை ஓலைப் பட்டி மண்டபம்! தென்னை ஓலை தாஜ்மஹால் கட்டிடம்!

# திருவாரூர் நோக்கித் திரளுவீர்!

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலரின் புதிய நூல்கள்

| | |
|---|---|
| தத்துவமும் வாழ்வும் | 2—00 |
| வாழ்வு உயர வழி | 1—50 |

லியோ டால்ஸ்டாய்

| | |
|---|---|
| கலையும் வாழ்வும் | 2—50 |

புலியூர் கிழார்

| | |
|---|---|
| கவியரசரும் புவியரசரும் | 1—50 |
| சிலம்புச் செல்வி | 1—50 |

டி. என். ராமச்சந்திரன்

| | |
|---|---|
| வால்டையர் முதல் மாபசான் வரை | 2—00 |

தோ. ந. வீரராகவன்

| | |
|---|---|
| மகாத்மா புத்தர் | 1—50 |

இமயப் பதிப்பகம்,

நாகப்பட்டினம்.

கிளை:— 242, தம்பு செட்டித் தெரு, சென்னை—1


ளோடு கப்பல் ஏறிவிடுவானே யானால், இங்கே இருக்கிற எந்த பெரிய அதிகாரிக்கும் ஐநூறு ரூபாயிக்கு மேல் சம்பளம் கிடையாது என்று! என்ன ஆயிற்று? இன்றைய தினம் இந்த நாட்டிலே யிருக்கிற காங்கிரஸ் மந்திரிமார்கள் வாங்குகிற சம்பளம் என்ன?

மாதம் ஒன்றுக்கு ரூ. 1500. ஏன் இப்படி மூன்று பங்கு அதிகமாக வாங்குகிறாய் என்று கேட்டால், 'அது அவசியந்தான்' என்று சொல்லிவிடுகிறார்கள்!

அதைப் போலவேதான், ஒவ்வொரு மாகாணத்திலிருக்கும் கவர்னருக்கு — தேவையில்லாத கவர்னருக்கு — வருடம் ஒன்றுக்கு மக்களுடைய வரிப் பணத்தை ஒன்பது இலட்சத்துக்குமேல் கொட்டிக் கொடுக்கிறார்கள்!

ஏன் இந்த நிலை; இப்படிச் செய்வது நீதியா; தருமமா— என்று கேட்டால் ஒரே வரி எடுக்கப்பட்ட ஜனநாயகத் தத்துவமா?

"நீங்கள் இப்படிக் கேட்டால் நாங்கள் தமிழ்நாடு என்று பெயர் வைக்க மாட்டோம். இரண்டு வருட காலத்திற்கு வாயை மூடிக் கொண்டு சும்மா இடங்கள். பிறகு நாங்களாகவே வைத்து. மக்களிடத்திலே பெருமை வாங்கிக் கொள்கிறோம்!" என்கிற ரீதியில் சுப்பிரமணியம் பேசுகிறாரே; இது எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது?

எதிர்க் கட்சிக்காரர்கள் ஒரு காரியத்தை நிறைவேற்றும்படிச் சொன்னால் அதை நிறைவேற்றமாட்டார்களாம்! அப்படிச் சொல்லுகிற அதே ஜனநாயகவாதிதான் ஓர் இடத்திலே இடறி விழுகிறார்—அந்தோ பரிதாபம்!

உதகமண்டலத்திற்கு சட்டசபை போக வேண்டும்; நீலகிரி மாவட்டத்திற்கு சட்டசபை செல்ல வேண்டும்—இப்படி ஒரு

# பயிற்சி தரும் பாசறை நோக்கி

போன்ற தெப்பங்களை அங்கே கட்டுகிறார்கள். அழகான ரதங்கள் வைத்து ஜோடித்து அல்ல; கீழே கட்டுகின்ற கட்டைகளை அரை பர்லாங்கு நீளத்திற்கு, அரை பர்லாங்கு அகலத்திற்கு ஒன்றாகக் கட்டி— அவைகள் அத்தனையையும் ஒன்றாகச் சேர்த்து கடலிலே தெப்பமாக மிதக்க விடுகிறார்கள். அப்படி மிதக்க விடுகின்ற அந்தத் தெப்பம்—அந்த பரண் போன்ற தெப்பம் கடலோடு போய் விடக் கூடாது என்பதற்காக அழுத்தமான சங்கிலிகளைப் போட்டு கடற்கரை ஓரத்திலே கட்டி வைக்கிறார்கள். அப்படி கட்டப் படுகின்ற தெப்பத்தின் மீது நெற் பயிரின் வேருக்குத் தேவையான அளவுக்கு மணலைப் பரப்புகிறார்கள். பின் அந்த வளமான எரு நிறைந்த மண்ணின்மீது பயிரிடுகிறார்கள்! இந்தப் புதுமையான முறையால் மிகக் குறைந்த அளவில்தான் பயிரிட முடிகிறது என்ற காரணத்தால், மேலும் ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்தார்கள். அதுதான் ஜப்பானிய முறை என்பது! அந்த ஜப்பானிய முறை சாகுபடியைத்தான் இங்கு கடன் வாங்கி—இரவல் வாங்கி—பல இடங்களில் பயிரிடுகிறார்கள்.

அங்கே நிலமில்லை—நீர்மேலே நிலத்தை உண்டாக்குகிறார்கள்!

இங்கே நீரிலே நிலம் அமைக்க வேண்டாம்—நிலம் ஏராளமாக இருக்கிறது! ஆனால் பணம்தான் இல்லை என்கிறார்கள்.

நாம் சொல்லுகிறோம்; பணமும் ஏராளமாக இருக்கிறது. காமராஜருடைய கையிலே அல்ல; வடநாட்டிலேயுள்ள நேருவினுடைய கையில் இருக்கிறது! ஆனால் யாருடைய பணம் அது? நம்முடைய பணம்! எப்படி வந்த பணம்? நாம் கொட்டிய குருதியிலே இருந்து வந்த பணம்! அந்தப் பணமெல்லாம் வடநாட்டுப் பொக்கிஷத்திலே இருக்கிறது!

அவர்கள் பாலைவனத்தைச் சோலைவனமாக்குகிறார்கள் நம்முடைய பணத்தைக் கொண்டு! ஆனால் இங்கே திட்டங்கள் வேண்டுமென்றால் "எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது?" என்கிறார்கள். நான் சட்டசபையிலே எடுத்துக் கூறினேன், இதோ ஒரு திட்டம் இருக்கிறதே; இதை நிறைவேற்றுங்கள் என்று! 1920-ம் ஆண்டு முதல் வெள்ளைக்காரனுடைய காலத்திலேயே அறிவிக்கப்பட்ட சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் சொன்னேன். அது நிறைவேறுமேயானால் தமிழகம் வளம் கொழிக்கும் பூமியாக மாற முடியும்! தூத்துக்குடி நல்ல ஆழ் கடல் துறைமுகமாக—கப்பல் அருகாமையிலேயே வரக்கூடிய பெரிய துறைமுகமாக அமைய முடியும்! ஆனால், அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை— தென்னகத்தின் நல்வாழ்வுக்கு வழி செய்யக்கூடிய திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் பணமில்லை என்கிறார்கள்.

அப்படி பணமில்லாத சர்க்காருக்கு படாடோப வாழ்க்கை ஏன்?

'எங்கெங்கோ நமக்குக் கடன் கேட்கச் சென்றேன். நேருவாகிய நானே சென்றேன்; பலன் இல்லை. நமது மாஜி நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அமெரிக்காவுக்கு அனுப்பினேன்; பயனின்றி திரும்பிவிட்டார்!' என்றெல்லாம் கூறுகிறாயே, கடன்கார சர்க்காரே! உன்னைக் கேட்கிறேன் — பணமில்லை என்று சொல்லுகிற உனக்கு வாய் ஜவடால் ஏன்?

அத்தர், புனுகு, ஜவ்வாது ஏன்?

ஆடம்பர வாழ்க்கை ஏன்?

அரண்மனைகள் ஏன்?

இவ்வளவையும் வைத்துக் கொண்டு—இத்தகைய சுகங்களை இழக்க முடியாத நீதான் அன்றொரு நாள் தீர்மானம் போட்டாய், கராச்சியிலே நடைபெற்ற மாநாட்டிலே — இந்த நாட்டில் வெள்ளைக்காரன் தன்னுடைய மூட்டை முடிச்சுகளோடு

யில் பதில் சொல்லி விடுகிறார்கள் ஜனநாயக ரீதியில் இவைகளில் எதையும் மாற்ற முடியாது என்று! சுப்பிரமணியம் ஜனநாயகத்தின் முன்னோடும் பிள்ளையாம்! பண்டித நேரு ஜனநாயகத்தின் முன்னோடும் தலைவராம்! இவர்கள் எல்லாம் இன்றைய தினம் ஜனநாயகத்தையா இந்த நாட்டில் வளர்க்கிறார்கள்?

வீர நெப்போலியன் தன்னுடைய மாணவப் பருவத்தில் ஜனநாயகத்தை ஆதரித்து ஒரு கட்டுரை எழுதினானும்—அதற்காக தன்னுடைய ஆசிரியரால் தண்டிக்கப்பட்டானும்!

ஜனநாயகத்தை ஆதரித்துக் கட்டுரை எழுதி ஆசிரியரால் தண்டிக்கப்பட்ட நெப்போலியன், நாட்டின் தலைவனாக மாறியதும்—கையிலே பெரும் படைகள் வந்ததும்—அந்த ஜனநாயகத்தைக் கொன்று புதைக்கும் சர்வாதிகாரியாக மாறினான்! அதைப்போலத்தான் இன்றைய தினம் ஆட்சி பீடத்திலிருப்பவர்களும், ஜனநாயகத்தை மக்களுக்குப் போதித்து விட்டு — சர்வாதிகார சீடர்களாக நாட்டிலே உலவிக் கொண்டிருக்கிறார்கள்! எது கேட்டாலும் முடியாதாம்; இருந்தாலும் கூறுகிறார்கள், மக்களாட்சி — ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது என்று!

"சென்னைக்குத் தமிழ்நாடு என்று ஏன் பெயர் வைக்கக் கூடாது?" என்று நம்முடைய நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் இந்த முறை சட்டசபையிலே மீண்டும் வினாக்குறியைக் கிளப்பினார்.

அப்பொழுது சுப்பிரமணியம் சொன்னார் — ஜனநாயகத்தின் முன்னோடும் பிள்ளை பேசினார்— 'ஏன் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை தெரியுமா? எதிர்க் கட்சிக்காரர்களாகிய நீங்கள் கேட்கின்ற காரணத்தால்தான்!" என்று!

ஜனநாயக வாதியினுடைய பதிலா அது?

இதுதான் புடம் போட்டு

நீலகிரித் தொகுதி உறுப்பினர் கேட்டார். அந்த நேரத்திலே சுப்பிரமணியம் பதில் சொன்னார், "நாங்கள் வருவது பற்றி ஆட்சேபனை இல்லை; ஆனால் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது; அவர்கள் ஒத்துக் கொண்டால் நாங்கள் வருகிறோம்!" என்று!

அதற்கு அண்ணா அழகாக பதில் சொன்னார்கள்: "நாங்கள் எதிர்ப்பது உண்மைதான். ஆனால் நாங்கள் எதிர்க்கிறோம் என்பதற்காக சுப்பிரமணியம் உதகமண்டலம் செல்லவில்லை என்கிறார். அது உண்மையானால் நாங்கள் கேட்கிறோம் என்பதற்காக ஏன் தமிழ்நாடு என்று பெயர் தரக்கூடாது? உதகமண்டலத்திற்குப் போவதற்கு தி. மு. கழகம் சம்மதிக்க வேண்டுமானால், ஒரு நிபந்தனை! நீங்கள் இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும். அப்படி பெயர் வைத்த மறுகணமே நான் உதகமண்டலத்திற்கு வர சம்மதிக்கிறேன்!" என்று எடுத்துக் காட்டினார்கள்.

உள்ளபடியே ஜனநாயகவாதியாக இந்த சுப்பிரமணியம் இருப்பாரேயானால், அடுத்தபடியாக ஒரு மணி நேரம் பேசியவர் அண்ணா போட்ட நிபந்தனைக்குப் பதில் பேசியிருக்க வேண்டும். அதை விட்டு விட்டு என்ன பேசினார்? திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி விமர்சித்து, "திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் எப்படிப்பட்டது தெரியுமா? நான் படித்த காலத்தில் என்னோடு ஒரு மாணவ நண்பன் இருந்தான். நெருங்கிய நண்பன் அவன். ஒரு நாள்கூட குளிக்கமாட்டான். உடம்பெல்லாம் அழுக்கு மயமாக இருக்கும். நாறும் பக்கத்திலே நின்றால். ஆனால் வெளியிலே கிளம்புகிற நேரத்திலே அந்த மாணவ நண்பன் அழுக்குத் தெரியாமலிருக்க, மேலே ஜவ்வாது போன்ற வாசனைப் பொருள்களைப் பூசிக்கொண்டு, வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு வருவான்—அவனைப்

# அடிமை விலங்கினை ஒடித்திட

போன்றதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்!" என்றார்.

உடனே நான் எழுந்து சுப்பிரமணியம் அவர்கள் மந்திரி வேலையைவிட்டு, 'சோப்' வியாபாரம் செய்யலாமே — என்று கிண்டலாகச் சொன்னேன்!

அவர்கள் இப்படி வீண் வாதங்கள் செய்கிறார்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகின்ற தத்துவங்களை—நாட்டுக்குத் தேவையான—உருவான திட்டங்களைச் சொல்லத் தயாராயில்லை!

நான் தஞ்சை மாவட்டத்தி லுள்ள மன்னார்குடியில் நடைபெற்ற ஒரு திருமணத்திற்குச் சென்றுவிட்டு, புகை வண்டியில் சென்னைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது விழுப்புரத்திற்கு அருகில் இப்படியொரு வேதனையான சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

25 வயதுள்ள ஒரு வாலிபன் திற்கு பக்கத்திலுள்ள விக்ரவாண்டியில் ரயில் நிறுத்தப்பட்டது. மேலே பார்த்தால்... அவன் பிணமாகக் கிடக்கிறான்! அவனுடைய உடலிலிருந்து வழிந்த ரத்தம், அவனுக்கு இரண்டணா சில்லரை தர மறுத்த பெரிய மனிதனின் சட்டையெல்லாம் வழிந்திருக்கிற காட்சியைக் கண்டோம்!

தினம் தினம் இப்படிப்பட்ட சாவுகள் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலேதான் நாட்டிலே வறுமையில்லை; சுபீட்சம் வந்துவிட்டது; எங்களுடைய பதினோரு ஆண்டு கால ஆட்சியில் தேனும் பாலும் ஓடுகிறது—என்று கூறுகிறார்கள்! அப்படியல்ல; ரயிலுக்குக் கீழே மாத்திரமல்ல; ரயிலுக்கு மேலேயும் ரத்த ஆறு ஓடுகிறது இந்த ஆட்சியில்! வறுமையில்லையாம்! வாட்டம் இல்லையாம்! ஏழைகளெல்லாம் இன்பமாக வாழ்கிறார்களாம்! காங்கிரஸ்காரர்கள் நாட்டிலே கூறி வருகிறார்கள்!


ஒப்பற்ற கலை விருந்து ! ஒரே நாள் மட்டும் !

திருச்சி, தேவர் மன்றத்தில்
17—5—58 சனி இரவு 10 மணிக்கு
நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள்
தலைமையில்

மு. கருணாநிதி
நடிக்கும்

புதுமை நாடக மன்றத்தாரின்

'உதய சூரியன்'

நாடகம் நடைபெறும்.

கட்டணம் ரூ. 5, 3, 2, 1. பெண்கள் தரை 0—8—0

அமைப்பாளர் : குளித்தலை முத்துகிருஷ்ணன்.


# பண்புடைத் தோழர்களே! திரளுவீர்!

மூன்றாவது வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்த ஒரு பெரிய மனிதரிடம் "இரண்டணா கொடுங்கள் எனக்கு; டீ சாப்பிட வேண் [illegible] முடியவில்லை [illegible] ருக்கிறான். [illegible] தரோ '[illegible] விரித்துவி[illegible] அவன். [illegible] வில்லை. [illegible] என்று யோசித்தான். டீ விற்றுக் கொண்டு அங்கே வந்த வியாபாரியிடம் டீயை வாங்கிச் சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு கோப்பையை அவன் கையில் கொடுத்தான். வியாபாரி அதை வாங்கி தண்ணீர் ஊற்றிக் கழுவிவிட்டு, கையை நீட்டினான். என்ன என்று கேட்டான் வாலிபன். "காசு" என்றான் வியாபாரி. "காசா" என்று கேள்விக்குறி போட்டுவிட்டு, "இல்லை போ" என்றான் அந்த வாலிபன். ரயில் நகர ஆரம்பித்தது. வாலிபன் ரயிலிலே ஏறப்போனான். உடனே டீ வியாபாரி அவனைப் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டான். "[illegible]டு மரியாதையாக சில்லரை கொடு! இல்லையானால் உன்னை [illegible]ாலீசில் ஒப்படைத்துவிடுவேன்!" என்று மிரட்டி[illegible] தா தன்னை ஏமாற்[illegible]டான் என்ற கோபத்தில்! உடனே அந்த வாலிபன் திமிறிக் கொண்டு மீண்டும் ரயிலில் ஏற, ரயில் வேகமாக நகர, கீழே நின்றால் எங்கே மீண்டும் பிடித்து விடுவானோ என்று பயந்து ரயில் உச்சியிலே ஏறி உட்கார்ந்து கொண்டான், வாலிபன்! ரயில் வேகமாகநகருகிறது. கடவுளுக்கும் இல்லாத கருணை—காங்கிரஸ் கவர்மெண்டுக்கும் இல்லாத கருணை—விழுப்புரத்தில் இருந்த இரும்பு 'கருடரு'க்கு இருந்த காரணத்தால் மேலே உட்கார்ந்திருந்த அவன் தலையிலே அந்த இரும்புத் தண்டவாளங்கள் மோத — அவனது தலை சுக்கல் சுக்கலாக வெடிக்க—ரத்தம் ஒழுக — அங்கேயே மாண்டு விட்டான்! ஒருவன் மேலே ஏறியிருக்கிறான் என்ற தகவல் ரயில்வே அதிகாரிகளுக்குத் தெரியவே ரயிலை நிறுத்துமாறு உத்தரவிட விழுப்புரத்

ஆனாலும் இப்படிப்பட்ட நிலைமைகளை நாட்டிலே அன்றாடம் பார்க்கிறோமே; ஏன்? ஏன் [illegible] ணம்?

நெய்வேலியை நினைக்கிறாய் என்றால், யாரால்?

பரம்பிக் குளம் தண்ணீருக்காக ஓடுகிறாய் என்றால், யாரால்?

காவிரி வட்டத்திலே எண்ணெய் இருக்கிறதா என்று பார்க்கிறாய் என்றால், யாரால்?

எங்களுடைய தேர்தல் கால சுவரொட்டிகளை நீ கிண்டல் செய்தாயே; அந்தச் சுவரொட்டிகளல்லவா உனக்குப் பாடம் தந்திருக்கின்றன இப்போது!

இன்றைய தினம் சுவரொட்டிகளில் கண்ட வாசகங்கள் கேலி பேசப்பட்டாலும்கூட, அவை பலனற்றுப் போய்விட வில்லையே!

"முந்திரித் தொழிலும் தேய்கிறது தெற்கே!"

என்று அன்று நமது சுவரொட்டிகளில் காணப்பட்டது! மந்திரி சுப்பிரமணியம்-கிண்டல் செய்தவர் தனது பட்ஜெட் உரையிலே பேசுகின்ற நேரத்தில், "முந்திரித் தொழிலுக்காக நான்கு இலட்ச ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம்!" என்று கூறிவிட்டு, "இது தேர்தல் நேரத்தில் தி. மு. கழகம் செய்த பிரச்சாரத்திற்கு — ஓரளவு அதன் தலைவர்களுக்கு திருப்தி அளிக்குமென்று நினைக்கிறேன்!" என்று சொல்வானேன்? ஆனால் நாம் குறிப்பிட்ட முந்திரித் தொழில் அதுவல்ல; முந்திரி பயிரிடுவதைப்பற்றியல்ல; முந்திரி ஓட்டிலேயிருந்து கிடைக்கின்ற ரசாயனப் பொருளைக் கொண்டு செய்கின்ற மாபெரும் தொழிலை

நாங்கள் குறிப்பிட்டோம்! ஆனால் சுப்பிரமணியம் முந்திரித் தொழிலுக்கு நான்கு இலட் [illegible] ஒதுக்கியது தி. மு. க. [illegible]ருக்கு மகிழ்ச்சி அளிக் [illegible] று கூறி விட்டு, பின், [illegible] தி. மு. கழகத்தவர் [illegible]க்கு வந்து என்ன [illegible] விட்டார்கள் என்று [illegible] என்றால், அவரது பேச்சிலே எவ்வளவு முன்னுக்குப்பின் முரண்பாடு!

இப்படி முரண்பாடுகள் மட்டுமல்ல; வேண்டு மென்றே குற்றம் சொல்லும் பண்புடனும் நம்மீது இழி மொழிகளை -பழிச் சொற்களைத் தூவி வருகிறார்கள் இன்று!

அவைகளை எல்லாம் கடந்து—எதிர்ப்புகளையெல்லாம் தாண்டி — நாம் இலட்சியபுரிப் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறோம்!

தென்னகம் அனுபவித்து வருகிற ஓரவஞ்சனையைக் களைவதற்கும், வடநாட்டு ஆதிக்கப் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கும், தமிழ்த் தரணியை—திராவிடத்தை—தென்னாட்டை மீட்பதற்கும், திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் — அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே — நாவலர் அவர்களுடைய தலைமையிலே அணிவகுத்து நிற்கிறது!

"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?" — என்று அண்ணா அவர்கள் அடிக்கடி பூரிப்போடு கேட்பதுபோல—"தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்று அடிக்கடி பெருமிதம் அடைவதுபோல — நீங்கள் அத்தனை பேரும் அந்தத் தேசிய விடுதலைப் பாசறையிலே அணி திரண்டு நிற்க வேண்டும்!

யாரைத் தலைவராக — செயலாளராக—படை வீரர்களாக நாம் பெற்றிருக்கிறோம்?

வேலும் வாளும் உண்டாக்கிய இரத்தக் கடலில்-பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் மண்டை ஓடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளை—அறுந்த நரம்புத் துகள்களைக் கண்டு முகம் கோணமல்-முகாரி பாடாமல்-எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ-எதிரியின் கணை பாயுமோ என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்கு பார்ப்பது வீரர்களுக்கு அழகல்ல! மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு; மங்கையின் இதழைவிடச் சுவையானது — என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்பவனே பராக்கிரமசாலி—பைந் தமிழன்—பாராட்டுக்குரியவன்—என்ற பாசறைக் காவியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்த அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே — நாவலருடைய தலைமையிலே—தி. மு. கழகத்தின் அணிவகுப்பிலே கூடியிருக்கிற நாம் இந்த நாட்டை இரத்தம் சிந்திப் பெறுவோம்; நம்முடைய இரத்தத்தை; எதிரியின் இரத்தத்தை அல்ல! உறுப்புகளை அறுத்தெறிந்து பெறுவோம்! நரம்புகளை உதிர்த்துக் கொடுத்துப் பெறுவோம்! நமக்கு நாமே தியாகம் செய்து பெறுவோம்!

அடிமை நாட்டிலே பிறந்த நம்முடைய சமாதி சுதந்திர நாட்டிலே எழுப்பப்படுகிறது; நம்முடைய கல்லறை விடுதலை பெற்ற மண்ணிலே வைக்கப்படுகிறது என்கிற ஆறுதலோடும் - பெருமையோடும் இறுதி மூச்சை விடுவதற்கும் தயாராக இருக்க வேண்டும்!

அத்தகைய துணிவை-பயிற்சியை அளிக்கின்ற பாசறை ஒன்று மே, 10, 11 தேதிகளில் திருவாரூரில் அமைகிறது! திரண்டு வந்து பயனடைய -சிறப்பிக்க - வேண்டுகிறேன் - வணக்கம்!

●●●

# அழகிரி மேடையிலே கூடுவோம்!